அனுப்புதல் :

பெறுதல் :

துணை ஆணையர்
ஒருங்கிணைப்பாளர், விசாரணைக்குழு,
இணைஆணையர் அலுவலகம், இந்துசமய அறநிலையத்துறை,
எண். 8 ஆற்றங்கரை தெரு, புதுப்பாளையம், கடலூர் – 607001.
இ-மெயில் – vocud.hrcetn.gov.in

அய்யா வணக்கம்,

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். சிதம்பரம் நடராசர் கோவில் தொடர்பாக, விசாரனை குழுவிடம் கீழ் கண்டவாறு எனது ஆலோசனைகளை முன் வைக்கின்றேன்.

1. தமிழகத்தின் பிறகோவில்களில் உள்ளது போன்று உண்டியல் வைத்து பக்தர்களிடம் காணிக்கை பெற வேண்டும்.
2. அனைத்து விதமான பூசை, அர்ச்சனைகளுக்கும் உரிய ரசீது தரப்பட வேண்டும்.
3. சிற்றம்பல மேடையில் நின்று நடராசனை தரிசிக்க கட்டணம் வசூலிக்க கூடாது.
4. ஒவ்வொரு சன்னதியிலும் பூசை செய்யும் தீட்சித அர்ச்சகர்கள் பெயர் கோவில் அலுவலக வளாகத்தில் ஒட்டப்பட வேண்டும்.
5.பிற கோவில்களில் உள்ளது போல் அங்கீகரிக்கபட்ட தரமான பிரசாத கடைகள் அமைக்க வேண்டும்.
6.நடராசர் கோவிலுக்கு சொந்தமாக உள்ள நகைகள் பட்டியல், நிலங்கள் மற்றும் சொத்து விபரங்களை அதிகார பூர்வமாக இணைதளத்தில் வெளியிட வேண்டும்.
7.கோவிலுக்கு வரும் பக்தர்களின் குறைகளை கேட்கவும், அதை நிவர்த்தி செய்யவும் உரிய அலுவலரின் பெயர் மற்றும் போன் நம்பரை பக்தர்களுக்கு தெரிவிக்க வேண்டும்.
8. கோவிலில் பணிபுரியும் தீட்சிதர்களுக்கு அவரவர் வேலைகளுக்கு ஏற்ப உரிய மாதம் ஊதியம் மற்றும் சட்டப்படியான பணப்பலன்கள் வழங்கப்பட வேண்டும்.
9. தினமும் சிற்றம்பல மேடையில் ஒவ்வொரு கால பூசையின் போதும் தேவார திருமுறைகளை இனிமையான குரலில் பாடும் வகையில் ஓதுவார்களை போதுமான ஊதியம் கொடுத்து பணியமர்த்த வேண்டும்.
10.பரம்பரை வாரிசுரிமைபடியான பணிநியமனம், நிர்வாக முறை சட்டப்படி ஒழிக்கப்பட்டுவிட்டது. சிதம்பரம் கோவிலில் மட்டும் பரம்பரையாக தீட்சிதர்கள் நிர்வாகம் ஒழிக்கப்பட வேண்டும்.
11. அனைத்து சாதி அர்ச்சகர் பணி நியமனம் சிதம்பரம் நடராசர் கோவிலுக்கும் நியமிக்கப்பட வேண்டும்.
12. சிதம்பரம் நடராசர் கோவிலில் நந்தனார் நுழைந்த தெற்கு வாயிலை அடைத்து தீட்சிதர்கள் எழுப்பிய தீண்டாமை சுவரை அகற்ற வேண்டும்.
13. காவல் நிலையத்தில் கிரிமினல் வழக்குகள் உள்ள தீட்சிதர்கள் கோவில் பூசை நிர்வாகத்திலிருந்து உடனடியாக தடுக்கப்பட வேண்டும். உலகப்புகழ் பெற்ற சிதம்பரம் நடராசர் கோவிலை இதுவரை நிர்வாகம் செய்துவந்த தீட்சிதர்களால் ஏற்பட்ட விளைவுகள் குறிப்பாக வருமான இழப்பு, சொத்துக்கள் இழப்பு, பக்தர்களுக்கு ஏற்பட்ட துன்ப துயரங்கள் கோவிலுக்கு நன்கொடை வழங்கிய பெரும் செல்வந்தர்கள் குறித்தும் அதன் வரவு செலவு குறித்து நீதிவிசாரணை நடத்தப்பட வேண்டும்.

இப்படிக்கு